உ

# மழலைத் தேன்



## குழந்தைப் பாடல்கள்

திருவாட்டி கனகம்மா வைத்தீஸ்வரன்

நினைவு வெளியீடு

1987 - 10 - ௨

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
1924-11-30

மறைவு
1987-9-8

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காய்
பண்புடை மக்கட் பெறின்.
— குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்க்கைச் சீர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வளரிளம் பருவத்தில் அதனைத் தாங்கும் தூண்களுள் ஒருவராக விளங்கிய சமூக சேவையாளர் திரு. சின்னக்குட்டி தப்பு ஆசிரியர் அவர்கள்.

தப்பு ஆசிரியர் - அன்னலட்சுமி தம்பதியின் அருந்தவச் செல்வியாக, மூத்தபுதல்வியாக 1924-11-30 ஆம் திகதி கனகம்மா அவர்கள் பிறந்தார்

கனகம்மா அவர்கள் பன்னாலை சேர்கனக சபை வித்தியாசாலை, தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை, உடுவில் இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

திரு. ரீ. எம். சீ. வைத்தீஸ்வரன் சிறந்த அரசியல் அறிஞராகவும், தொழிற்சங்கவாதியாகவும் விளங்கியவர். இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்ற நிறுவனத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்கியஇவர் அதன் செயலாளராகவும் திகழ்ந்தார். தந்தை செல்வநாயகம், கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோர் தமிழரசுக் கட்சியை நிறுவிய போது வைத்தீஸ்வரன் அவர்கள் அதில் இணைந்து பணியாற்றி அமைப்புச் செயலாளராகவும் விளங்கினர், சொந்த மைத்துனரான புகழ் பூத்த வைத்தீஸ்வரன் அவர்களை கனகம்மா அவர்கள் 1944 இல் திருமணம் செய்தார்.

ரஞ்சன், குணாளன், தயாளன் ஜெயபாலன் ஆகிய நான்கு புதல்வர்களை வைத்தீஸ்வரன் - கனகம்மா தம்பதியினர் பெற்றெடுத்தனர். தமது இருபத்தெட்டாவது வயதில் 1953 ஆண்டு தை மாதம் 16 ஆம் திகதி தம் துணைவரை இழந்த கனகம்மா அவர்கள் மிகவும் உறுதியோடு வாழ்ந்து தமது பிள்ளைகளைக் கற்பித்து மிக உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைத்தார்.

மூத்த மகன் ரஞ்சன் நில அளவையாளராக இலண்டனில் தொழில் புரிகிறார். இரண்டாவது மகன் குணாளன் கமநல சேவை அலுவலகத்தில் பணியாற்றுகிறார். மூன்றாவது மகன் தயாளன் இங்கிலாந்தில் மின் கணனித் துறையில் பிரதம பொறியியலாளராகப் பணி புரிகிறார். ஜெயபாலன் பசுமைப் புரட்சியிலும் சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டவர். வவுனியாவில் காந்திய ஸ்தாபனத்தின் செயலாளராகப் பணிபுரிகிறார். புதல்வர்கள் முறையே அழகராணி, கமலேஸ்வரி, சிறீலதா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

திருப்பிரமபுரம். பண்: குறிஞ்சி.

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனை யேமனம், பரவி யுய்ம்மினே.

திருவாரூர். பண்: குறிஞ்சி

சித்தந் தெளிவீர்காள், அத்த னூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே,

திருவீழிமிழலை. பண்: குறிஞ்சி

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே,

திருமுதுகுன்றம் பண்: குறிஞ்சி

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே.

திருவாலவாய் பண்: குறிஞ்சி

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினர், ஞால மாள்வரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிடைமருதூர். பண்: குறிஞ்சி

தோடொர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே.

திருவன்னியூர். பண்: குறிஞ்சி

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர், மன்னு சோதியே.

## திருநாவுக்கரசு நாயனார்

தலையே நீ வணங்காய் — தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண் மின்களோ — கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
என்றோள் வீசிநின் றாடும் பிரான் தன்னைத்
தலையே நீ வணங்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

யாழ். ஜெயம்

இறைவா உந்தன் பாதங்கள்
இருகை கூப்பித் தொழுகின்றேன்
சிறியேன் எந்தன் வேண்டுதலைச்
செவிசாய்த் தருளைச் செய்திடுவாய்

அன்பைப் போற்றி வாழ்ந்திடவும்
அறிவில் வளர்ந்து உயர்ந்திடவும்
துன்பம் நீங்கி மகிழ்ந்திடவும்
துணைசெய் என்னை மறவாதே.

ஏழை எளியோர் துயர் போக்க
இரங்கும் மனத்தை எனக்குத்தா
நாளும் நன்மை புரிகின்ற
நல்லவனாக எனை மாற்று

உண்மை இன்சொல் பேசிடவும்
உயிராய் ஒழுக்கம் காத்திடவும்
பண்புள்ளோனாய் நான் வாழ்ந்து
பரகதி பெறவும் அருள் புரிவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய் அண்ணரும் பூனைத்தம்பியும்

பா. சத்தியசீலன்

(சாதாரணமாக)

நாய்: வள் வள் வள் — நான் தான் நாய்!
பூனை: மியா மியா மியா — பூனை ஐயா!

(மிரட்டலாக)

நாய்: வள் வள் வள் — கடிப்பேன், டேய்!
பூனை: மியா மியா மியா—விருண்டுவன், டோய்!

(சமாளிக்கும் பாங்கில்)

நாய்: வள் வள் வள் — கடிக்க மாட்டேன்!
பூனை: மியா மியா மியா—விருண்ட மாட்டேன்!
நாய்: வள் வள் வள் — நண்பர்கள்!
பூனை: மியா மியா மியா — தோழர் ஐயா!

(கொண்டாட்டமாக)

நாய்: டும்! டும்! டும்! தம்பி, ஒற்றுமை வேண்டும்!
பூனை: டோம்! டோம்! டோம்! அண்ணே!
சண்டையி, டோம்!
நாய்: டும் டும் டும்! மேளம், அடி! டும் டும்!
பூனை: டோம் டோம் டோம்! வெடி, சுடு!
டோம்! டோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைப் பொழுதைப் பார் ஆகா

பா. சத்தியசீலன்

காலைப் பொழுதைப் பார், ஆகா!
காகம் கரையும் கா கா கா!

வாலைக் கிளப்பிக் கொண்டோடும்,
வண்ணு, அந்தக் கன்றைப் பார்!

பாலைப் பொழியும் பசுவைப் பார்!
பச்சைப் புல்லில் பனியைப் பார்!

காலைச் சூரியன் அழகைப் பார்!
கண்ணு, தாமரைக் குளத்தைப் பார்!

கிழக்கில் சூரியன் உதிக்கிறது,
குளத்தில் தாமரை சிரிக்கிறதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணன் ஒரு நாய்க்குட்டி

பா. சத்தியசீலன்

வாணன் ஒரு நாய்க்குட்டி !
வாலில்லாத நாய்க்குட்டி !
நாலு காலில் ஓடிவரும்
நன்றி உள்ள நாய்க்குட்டி !

காலைப் பிடிக்கும் நாய்க்குட்டி !
கட்டிக் கொஞ்சும் நாய்க்குட்டி !
விரலைச் சூப்பும் நாய்க்குட்டி !
விண்ணன் இந்த நாய்க்குட்டி !

பாட்டி தூக்கும் நாய்க்குட்டி !
பாப்பா கொஞ்சும் நாய்க்குட்டி !
வீட்டிலுள்ள எல்லார்க்கும்
விருப்பமான நாய்க்குட்டி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீடு

யாழ். ஜெயம்

எங்கள் வீடு ஓலை வீடு
எலிகள் பதுங்கி ஓடும் வீடு
தங்கை தம்பி நால்வரோடு
தந்தை தாயும் வாழும் வீடு

நல்ல காற்று வீசும் வீடு
நாலு புறமும் திறந்த வீடு
பல்லி பாட்டுச் சொல்லும் வீடு
பாய்கள் இல்லாச் சாக்கு வீடு

ஓட்டை வீடு மழையும் பெய்யும்
ஒழுக்கு வீடு குளிர்ச்சி வீடு
மூட்டைப் பூச்சி கூட்டமாக
முன்னும் பின்னும் ஓடும் வீடு

வெயிலும் கூட எறிக்கும் வீடு
வெளிச்ச வீடு வாடை வீடு
உயிரைக் காத்து நாங்கள் கூடி
ஒதுங்கக் கடவுள் தந்த வீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல் அலங்காரம்

வ. இராசையா

பாதைகள் கூடுவது சந்தி,
பலர்கூடி உண்ணுவது பந்தி,
தாவியே செல்லுவது மந்தி,
தாத்தாவின் வயிற்றிலே தொந்தி !

சந்திரன் விற்றனன் முட்டை,
காசிலே வாங்கினன் சட்டை,
சட்டையின் கைகளோ குட்டை,
காரணம் அவன்மிக நெட்டை !

'புஷ்பங்கள்' என்னுமோர் சொல்லு,
பாட்டிக்கு இதனோடு மல்லு !
சிரித்தால் எடுக்கிருள் பொல்லு,
அவளுக்கு இல்லையே பல்லு !

ஆகாய விமானங்கள் கொண்டு,
ஆட்களில் வீசுருன் குண்டு !
அன்பினை அறியாத மண்டு !
அவனுக்கு ஏன் மலர்ச் செண்டு ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல வாத்தியார் ஆடலிறை

வீட்டி லெமக்குக் கதைகள் கூறி
விளங்க வைத்தாள் பாட்டி
கூட்டி எம்மை நல்ல பாட்டுக்
கூறி வந்தாள் பாட்டி,

பள்ளிக் கூடஞ் சென்ற போது
பண்பு கொண்ட ஒருவர்
துள்ளிக் குதித்துக் கையைக் காட்டிச்
சொல்லித் தந்தார் பாட்டு.

நல்ல கதைகள் படங்களோடு
நமக்குச் சொல்லித் தந்தார்
நல்ல வாத்தி யாரெமக்கு
நாளும் தந்தை போல்வார்.

எழுதத் தெரியா எமக்கு நன்றாய்
எழுத்துஞ் சொல்லித் தந்தார்
அழுதா லெம்மை யழைத்த ணைத்தே
அன்பு காட்டி நிற்பார்.

சின்னத் தம்பி நீயும் வாடா
செல்வம் நீயும் வாடி
என்றும் மகிழ்ச்சி யாயி ருக்க
எங்கள் பள்ளி செல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைகள் செய்வோம்

மு. பொன்னம்பலம்

தாரணி வா
தமிழ் படி
ஆரணி வா
ஆங்கிலம் கல்

விமலா வா
விஞ்ஞானம் செய்
கமலா வா
கவிதைகள் தா

இந்திரா வா
இசைகள் பாடு
நந்தினி வா
நடனமிடு

கலைகள் எல்லாம்
எங்கள் கையில்
உலகை அன்புக்
கலையால் வெல்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புறாவே வா

மு. பொன்னம்பலம்

விடுதலைப் புறாவே விரைந்து வா — எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாடவா
அடிமை விலங்கை அறுக்க வா — நாம்
ஆனந்தமாய்க் கூத்தாடவா

சிறுவர் நாங்கள் சிரிக்க வா — எங்கள்
தேசம் ஓங்கித் தழைக்க வா
வறுமை நோயை விரட்ட வா — சம
தர்மம் வெல்ல பறந்து வா

கொடுமை அரசு அழிய வா — கொலை
கொள்ளை யாவும் தொலைய வா
விடியல் போலச் சிலர்த்து வா — கல்வி
வீரம் செல்வம் விளங்க வா

விடுதலைப் புறாவே விரைந்து வா — எங்கள்
வீட்டினில் அமர்ந்து பாட வா
கடவுள் போலச் சிறுவர்கள்
களங்கம் இன்றிச் சிறக்க வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் நாடு

மு. பொன்னம்பலம்

எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் நாடு என்குவோம்
எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் வீடு என்குவோம்

நாடும் வீடும் நமக்கிது
நாங்கள் வாழும் நிலமிது
காலம் காலமாய் எம்மைக்
காக்கும் தெய்வத் தாயிது

பாட்டி வாழ்ந்த குடிலிது
பாட்டன் நடந்த தெருவிது
கூட்டமாகக் கூடி நாம்
கலைகள் வளர்த்த நாடிது

அன்பை ஊட்டும் எமதகம்
அறிவை ஏற்றும் தாயகம்
பண்பு வீரம் கொண்டெமை
காக்கும் ஈழத் தமிழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்க்கைச் சீர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வளரிளம் பருவத்தில் அதனைத் தாங்கும் தூண்களுள் ஒருவராக விளங்கிய சமூக சேவையாளர் திரு. சின்னக்குட்டி தம்பு ஆசிரியர் அவர்கள்.

தம்பு ஆசிரியர் - அன்னலட்சுமி தம்பதியின் அருந்தவச் செல்வியாக, மூத்தபுதல்வியாக 1924-11-30 ஆம் திகதி கனகம்மா அவர்கள் பிறந்தார்

கனகம்மா அவர்கள் பன்னாலை சேர்கனக சபை வித்தியாசாலை, தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை, உடுவில் இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

திரு. ரீ. எம். சி. வைத்தீஸ்வரன் சிறந்த அரசியல் அறிஞராகவும், தொழிற்சங்கவாதியாகவும் விளங்கியவர். இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்ற நிறுவனத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்கிய இவர் அதன் செயலாளராகவும் திகழ்ந்தார். தந்தை செல்வநாயகம், கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோர் தமிழரசுக் கட்சியை நிறுவிய போது வைத்தீஸ்வரன் அவர்கள் அதில் இணைந்து பணியாற்றி அமைப்புச் செயலாள ராகவும் விளங்கினர், சொந்த மைத்துனரான புகழ் பூத்த வைத்தீஸ்வரன் அவர்களை கன கம்மா அவர்கள் 1944 இல் திருமணம் செய் தார்.

ரஞ்சன், குணாளன், தயாளன் ஜெயபா லன் ஆகிய நான்கு புதல்வர்களை வைத்தீஸ் வரன் - கனகம்மா தம்பதியினர் பெற்றெடுத் தனர். தமது இருபத்தெட்டாவது வயதில் 1953 ஆண்டு தை மாதம் 16 ஆம் திகதி தம் துணைவரை இழந்த கனகம்மா அவர்கள் மிக வும் உறுதியோடு வாழ்ந்து தமது பிள்ளைகளைக் கற்பித்து மிக உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைத் தார்.

மூத்த மகன் ரஞ்சன் நில அளவையாள ராக இலண்டனில் தொழில் புரிகிறார். இரண் டாவது மகன் குணாளன் சுகநல சேவை அலு வலகத்தில் பணியாற்றுகிறார். மூன்றாவது மகன் தயாளன் இங்கிலாந்தில் மின் கணனித் துறையில் பிரதம பொறியியலாளராகப் பணி புரிகிறார். ஜெயபாலன் பசுமைப் புரட்சியிலும் சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டவர். வவுனியாவில் காந்திய ஸ்தாபனத்தின் செய லாளராகப் பணிபுரிகிறார். புதல்வர்கள் முறையே அழகராணி, கமலேஸ்வரி, சிறீலதா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாவதி என்ற நற்குண நங்கைகளை மணம் புரிந்துள்ளனர் ரஜிதா, சஞ்சிதா, மீரா ஆகிய பேரப்பிள்ளைகளைச் சீராட்டும் பேற்றையும் கனகம்மா அவர்கள் பெற்றார்கள்.

இவரது ஏக உடன்பிறப்பான மகாஜனக் கல்லூரி கனிட்ட பிரிவு அதிபர் ரோகிணி அம்மாள் அவர்கள் ஓய்வுபெற்ற கச்சேரி பிரதம லிகிதர் கந்தையா இரத்தினவேல் அவர்களை துணைவராகக் கொண்டு பெற்ற மூன்று செல்வங்களான இராசகௌரி (புதுடில்லி மருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவி) இராஜவேல், இராஜயோகன் ஆகியோருக்கு அன்புப் பெரியதாயாக விளங்கினார்.

கணவரின் பொது வாழ்வில் அவருக்கு அருந்துணையாக விருந்து அனைவரது நன்மதிப்பையும் பெற்றார் கனகம்மா அவர்கள். தந்தையார் நடத்தி வந்த தெல்லிப்பழை தென்மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தைச் சில காலம் நடத்தினார்.

துணைவரைப் போலப் பிள்ளைகளும் அரசியலிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபட விழைந்த போது அவர்கள் தூய்மையுடன் அரசியல், சமூக சேவையாற்ற வழிகாட்டியானார்.

நோயற்ற வாழ்வைக் குறைவற்ற செல்வமாகப் பெற்ற கனகம்மா அவர்கள் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி 63ஆம் வயதில் 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதாகிய தமது அன்னையாரிடம் சுடுநீர் வாங்கிப் பருகிவிட்டு அவரது அணைப்பிலிருந்த படியே விண்ணுலகு சென்றமை அவர் புண்ணிய ஆத்மா என்பதைக் காட்டுகிறது

சுழிபுரம் க. இரத்தினவேல்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றிகள் !

08 - 09 - 87 செவ்வாய் நள்ளிரவு மரணித்து
13 - 09 - 87 ஞாயிறு ஈமச்சடங்குகளுக்கு
உள்ளான
எமது தாயாரின் மறைவை ஒட்டி

வருகைதந்து அநுதாபம் தெரிவித்த
அநுதாபச் செய்திகள் அனுப்பிய
உதவிகள் உபகாரங்கள் புரிந்த
இன்றைய கிரியைகளில் கலந்துகொண்ட
மழலைத் தேனுக்கு தம் கவிதைகளை தந்த
மலராக இதைத் தொகுத்து உதவிய

அன்பு நெஞ்சங்கள் கவிஞர்கள்
ஆசிரியர் மயிலங்கூடல் நடராசன்
அனைவருக்கும் எம் நன்றிகள்

"மிதிலை"
கொல்லங்கலட்டி வீதி,
தெல்லிப்பழை.

பிள்ளைகள்
8-10-87

குகன் அச்சகம் - தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org